1972 ஆகஸ்ட் 21]

Government Boy's High School, Kilapungudi, Sivagangai taluk, Ramanathapuram district.

*122 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the students of Government Boys' High School, Kilapungudi, Sivagangai taluk, Ramanathapuram district, are squatting on the floor, due to lack of benches and tables?

இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம், கீழ்ப்பூங்குடி, ஆண்கள் அரசினர் உயர்நிலைப் பள்ளி.

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம், கீழ்ப்பூங்குடி, ஆண்கள் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் உட்காருவதற்கு விசிப்பலகைகள், மேசைகள் (Benches and Tables) இல்லாத காரணத்தால் தரையில் உட்கார்ந்து மாணவர்கள் படிப்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம். மேற்படி பள்ளியில் போதுமான அளவிற்கு மரச்சாமான்கள் இல்லாததால், மாணவர்கள் சிமிட்டித் தரையில் உட்கார்ந்து கல்வி பயிலுகின்றனர். போதுமான அளவிற்கு மரச்சாமான்கள் வாங்க பள்ளிக் கல்வி இயக்குநர் தமது கருத்துருவை அரசிற்கு அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. திருஞானசம்பந்தம்: தலைவர் அவர்களே, அந்தப் பள்ளி மாவட்டத்திலே முதன்மையாக எஸ்.எஸ்.எல்.சி.யில் மார்க்குகள் பெற்றிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், 10, 15 ஆண்டுக்காலமாக இந்த வசதியற்ற நிலையில் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வசதிகள் இல்லாத காரணத்தால்தான், அங்கே அதிகமான மார்க்குகள் பெற்றிருக்கிறார்களோ என்னவோ. ஆனால் இப்போது 1970–71-ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் கண்டபடி வசதி இல்லையென்ற அளவில் பள்ளிக் கல்வி இயக்குநர் ரூ. 19

ஆயிரம் மதிப்பீட்டுச் செலவில் மரச்சாமான்கள் வாங்குவதற்கு கருத்துரையை அரசிற்கு அனுப்பியுள்ளார். விரைவில் முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தப்படும்.

Staff of the Nandanam Arts College, Madras.

* 123 Q.—THIRU K. RAJARAM (on behalf of Thiru V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the teaching staff of the Nandanam Arts College, Madras, have been transferred very often; and

(b) if so, the reasons therefor?

நந்தனம் கலைக் கல்லூரி ஆசிரியர்கள்.

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, நந்தனம் கலைக்கல்லூரி ஆசிரியர்கள் அடிக்கடி மாற்றப்படுகின்றனரா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) நந்தனம் அரசினர் கலைக் கல்லூரியில் வேலை செய்த 18 உதவிப் பேராசிரியர்களில் ஐவர் மாற்றப்பட்டனர். டியூட்டர், டெமான்ஸ்ட்ரேட்டர் போன்ற இதர 18 ஆசிரியர்களில் இருவர் மட்டுமே மாற்றப்பட்டனர்.

(இ) அவசர நிர்வாக நலனை முன்னிட்டும் உயர் பதவி யேற்றம் முன்னிட்டும் இம்மாற்றங்கள் செய்யப்பட்டன.

Ex-Hindi Pandits.

* 124 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be please to state—

(a) the number of Ex-Hindi Pandits of Government (Board) High Schools in the Coimbatore Revenue District whose special pay of Rs. 10 has not yet been restored;